1970 ஆகஸ்ட் 28]

திரு. வ. ஜார்ஜ் : கன்னியாகுமரி மாவட்டத்தில் பல அரசாங்கப் பாடசாலைகளிலும், தனியார் பாடசாலைகளிலும் க்ராப்ட் இன்ஸ்ட்ரக்டர்ஸ் பார்ட் டைமாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாரத்திற்கு இருபது பீரியடுகளுக்கு மேல் இருக்கின்றன. அப்படி இருந்தபோதிலும் முழு நேர வேலையாக அவற்றை ஆக்குவதற்கு வருடந்தோறும் கன்வர்ஷனுக்கு எழுதுவதும், அவை பாக்கட் வீட்டோ என்ற முறையில் அவை எந்தவிதமான உத்தரவும் இடாமல் இருக்கின்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் 18 வகுப்புகளுக்கு மேல் இருந்தால் அவர்களை முழு நேர ஆசிரியர்களாக கருதப்படும் என்ற உறுதியின் பேரில் அதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 18 வகுப்புகள் எடுக்கிற சூழ்நிலை இருந்தால் அவர்கள் முழு நேர ஊழியர்களாக கருதப்படுகிறார்கள். எல்லா வகைகளிலும் தகுதி பெற்று படிப்புத் தகுதி, தொழில் தகுதி இவை இரண்டும் பெற்றிருப்பார்களேயானால் அவர்களுக்கு முழு நேரச் சம்பளமும் தரப்படுகிறது. தொழில் தகுதி பெற்று படிப்புத் தகுதி பெறாமல் இருந்தால் ரூ. 55—1—70 என்ற அளவில் தரப்படுகிறது. தொழில் தகுதி பெறாமல் ப்ரீவொக்கேஷனல் அளவு பயிற்சிபெற்ற கல்வித் தகுதி மட்டும் பெற்றிருந்தால் 55 என்று இருக்கிறது. எல்லாத் தகுதிகளும் பெற்று 18 வகுப்புகளுக்கு மேல் இருந்தால் அவர்கள் முழு நேர ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். 18 வகுப்புகளுக்கு மேல் வேலை செய்து முழுத் தகுதியும் பெற்றும், அவர்களுக்கு முழு நேரச் சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்தால் அது என் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், அந்த ஆசிரியர்களின் குறைபாடுகளை நீக்க ஏற்பாடுகள் செய்யலாம்.

* 89 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Municipal Health Officer at Tiruchirappalli has found out chemical adulterated in the rose coloured sago "Vadam" used in marriages; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்பொருளை விற்றதற்காக திருச்சிராப்பள்ளியில் சின்னக் கடைத் தெருவைச் சேர்ந்த திரு. வெங்கட்ட சுப்பிரமணியம் என்பவரின் மகன் திரு. சிவகுமார் என்பவர் மீது வழக்குத் தொடரப்பட்டு, அவருக்கு திருச்சி குற்ற விசாரணை இணை நீதிபதி அவர்களால் 18—10—1969-ஆம் நாளன்று ரூ. 50 தண்டம் விதிக்கப்பட்டது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : மக்களுடைய உடல்நலனையும் சுகாதாரத்தையும் கருதி இம்மாதிரி கலப்படம் செய்வதைத் தடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆங்காங்கு இவற்றைக் கண்டு பிடிப்பதற்கு அதிகாரிகள் மூலம் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. திருச்சியைப் பொறுத்தவரையில் இந்தப் பொருளேச் சேர்ப்பதன் மூலம், வடாம் போன்றவற்றில் சேர்ப்பதன் மூலம் அது உடலுக்கு தீங்கு பயக்கிறது என்பதை ஒலிப்பெருக்கி மூலமும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் விளம்பரப்படுத்தி, வண்ணம் பெறவேண்டுமென்று இந்தப் பொருளேச் சேர்க்கிருர்கள், அதனுல் தீங்கு ஏற்படுகிறது, ஆகவே அதைச் சேர்க்கக்கூடாது என்று பிரசாரம் செய்யப்பட்டு திருச்சி மாவட்டத்தில் ஓரளவு அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் அந்த முறையைக் கையாண்டு மற்றவர்களுக்குத் தெளிவு பயக்கும்படி சொல்லப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : கேள்வி எண்கள் 90, 91, 92 இவை பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

*Seminar on mechanised fishing boats*

* 93 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the State Government participated at the Seminar on the mechanised fishing boats which was held at Madras in October 1969 under the auspices of the Planning Commission?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திட்ட ஆணைக்குழுவைச் சேர்ந்த திட்ட மதிப்பீட்டு நிறுவனம் 11—10—1969 அன்று நடத்திய மீன்பிடி படகுகள் கட்டும் திட்ட மதிப்பீட்டாய்வு தொடர்பான கருத்தரங்கின் தொடக்கக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சென்னே மீனளத்துறை இயக்குநரை திட்ட ஆணைக்குழுவின் வட்டார மதிப்பீட்டு அதிகாரி அழைத்தார். (தலைமையிட) மீனளத் துறைத் துணை இயக்குநர், சென்னே, மீனளத் துறைத் துணை இயக்குநர், மெரினு, ராயபுரம் ஆகிய இடங்களிலுள்ள படகு கட்டும் தளங்களின் பணி மேலாளர்கள் ஆகியோர் இக்கருத்தரங்கின் தொடக்கக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தக் கருத்தரங்கில் என்னென்ன பொருள்கள் பற்றி விவாதிக்கப்பட்டன? எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன ? அவற்றின் மீது மாநில அரசு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அது குறித்த விவரம் எதுவும் இல்லே. அந்தக் கருத்தரங்கில் யார் யார் கலந்து கொண்டார்கள், அரசாங்கம் கலந்து கொண்டதா என்ற கேள்விக்குத்தான் அரசாங்கச் சார்பில் பல அதிகாரிகள் கலந்து கொண்டார்கள் என்ற விவரம்தான் தற்போது என்னிடம் இருக்கிறது.

திரு. டி. மார்டின் : விசைப் படகுகளே உபயோகிப்பவர்கள் மூன்று மைல்களுக்கு அப்பால் சென்றுதான் உபயோகிக்க வேண்டும் என்று இருந்தும் கூட அந்த மூன்று மைல்களுக்குள்ளேயே விசைப்